# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102126

01/AC/2022/RPT

1. District : மாவட்டம் Ranipettai PS: காவல்நிலையம் V&AC, Ranipettai Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் Date: நாள் 04.05.2022 @ 17.00hrs

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: 1988 as amended by Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் (1) 01.04.2022 @ 11.00hrs (2) 06.04.2022 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் @ 11.00hrs (3) 28.04.22 @ 11.00hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.05.2022 Time : நேரம் 16.00hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.05.22 Time : 16.00hrs. 04.05.22 நேரம் 17.00hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Hand Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North East about 34 kms.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o Village Administrative Office Pazhayapalayam Mottur Sholinghur Tk, Ranipettai District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. P. Anandakumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Padavettan
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age 36 yrs. (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Farmer (g) Address : முகவரி No. 37 Pillayar koil street, Pazhayapalayam Village, Sholinghur taluk Ranipettai District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Murugan, Village Administrative Officer, Pazhayapalayam, Sholinghur Taluk, Ranipettai Dist.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
As the complainant engaged in his family work hence delay.

GCP 240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

(Demand of Undue Advantage Rs. 5,000/-)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheets Enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ......................, to take up the Investigation / Refused Investigation / transferred to PS.......................—.......................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P.அனந்தமொனு 4/5/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station S. Vijayalakshmi 4/5/22
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 05.05.2022 @ 0945hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S.VIJAYALAKSHMI
Rank: நிலை Inspector of Police, Vigilance & Anti Corruption, Ranipettai District

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

**(Contents of the F.I.R. in Ranipettai V&AC, Cr.No.01/AC/2022/RPT, U/s 7(a) of Prevention of Corruption Act 1988 as Amended by Prevention of Corruption (Amendment) Act 2018 Continues.....)**

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:-</u> இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் S.விஜயலட்சுமி ஆகிய நான் 04.05.2022-ம் தேதி மாலை 16.00 மணிக்கு இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது, புகார்தாரர் திரு. P.ஆனந்தகுமார், த/பெ படவேட்டான், No.37, பிள்ளையார் கோயில் தெரு, பழையபாளையம் கிராமம், சோளிங்கர் தாலுக்கா என்பவர் நேரில் ஆஜராகி, கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: விடுநர், P.ஆனந்தகுமார், த/பெ படவேட்டான், No.37, பிள்ளையார் கோயில் தெரு, பழையபாளையம் கிராமம், சோளிங்கர் தாலுக்கா. பெறுநர், காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, இராணிப்பேட்டை.அம்மா, நான் இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் தாலுக்கா, பழைய பாளையம் கிராமம், பிள்ளையார் கோயில் தெருவில் எனது குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து ஜீவனம் செய்து வருகிறேன். என் மனைவி பெயர் பானுபிரியா. எனக்கு லோகேஷ்வரி என்ற மகளும் சுதாகர் என்ற மகனும் உள்ளனர். என்னுடைய அப்பா படவேட்டானுக்கும் என்னுடைய சித்தப்பா வெங்கடாச்சலம் என்பவருக்கும் பழையபாளையம் கிராமம் பெருமாள் கோயில் தெருவில் பூர்விகமாக 1653 சதுர அடி அளவுள்ள வீட்டுமனை இருந்தது. அந்த மனையை என் அப்பா அவருடைய பாகமான 826 ½ ச.அடி இடத்தை ஜக்பந்தி போட்டு என்னுடைய பெயருக்கு கடந்த 29.03.2022 அன்று சோளிங்கர் பத்திர பதிவு அலுவலகத்தில் செட்டில்மெண்டாக கொடுத்தார். என்னுடைய சித்தப்பா வெங்கடாச்சலம் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். அவருடைய பாகத்தை இன்னொரு சித்தப்பா நீலகண்டனுக்கு கொடுப்பதாக முடிவு செய்து அவர் பெயருக்கு அன்றே சோளிங்கர் பத்திர பதிவு

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Ranipettai V&AC, Cr.No.01/AC/2022/RPT, U/s 7(a) of Prevention of Corruption Act 1988 (as Amendment in 2018). Continues.....)**

அலுவலகத்தில் பதிவு செய்தனர். மேற்படி பத்திர பதிவு செய்த உடன் பட்டா மாறுதலுக்கு லெட்டர் போர்டல் லாகின் வழியாக சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து நேரடியாக VAO பழைய பாளையம் ஆபிஸ் அனுப்பிவிட்டதாகவும் அதை அங்கு போய் பார்த்துக்கொள்ளும்படியும் சொன்னார்கள். அதன்படி நான் 01.04.2022 அன்று சுமார் 11 மணிக்கு பழைய பாளையம் மோட்டூரில் உள்ள VAO ஆபிஸ் போய் பழையபாளையம் VAO திரு.முருகன் என்பவரை பார்த்து பட்டா குறித்து விவரத்தை கேட்டேன். அதற்கு அவர் பதிவு செய்த பத்திர காப்பியை கேட்டார். பின்னர் மேற்படி பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு சோளிங்கர் வட்டாச்சியர் அலுவலகத்திற்கு பரிந்துரை செய்ய ஐந்தாயிரம் செலவாகும், கொடுத்தால் உடனே முடித்து கொடுக்கிறேன் என்று சொன்னார். நான் விவசாயம் தான் செய்கிறேன், என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று சொன்னதற்கு அவர் முதலில் போய் EC மற்றும் பத்திர காப்பி எடுத்துக்கொண்டு வந்து கொடு பிறகு பார்க்கலாம் என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார். பின்னர் நான் பதிவு செய்த பத்திரம் மற்றும் EC நகல் எடுத்துக்கொண்டு கடந்த 6.4.2022 அன்று காலை சுமார் 11.00 மணிக்கு கொண்டுபோய் பழைய பாளையம் VAO அலுவலகத்திற்கு சென்று VAO திரு.முருகன் அவர்களை பார்த்துக் கொடுத்தேன். அவர் அதை வாங்கி கொண்டு நான் கேட்ட பணம் ரூ.5000 எடுத்து வந்தாயா என்று கேட்டார், அதற்கு நான் இப்போது கொண்டு வரவில்லை என்று சென்னேன். அவர் மீண்டும் என்னிடம் சோளிங்கர் வட்டாச்சியரிடம் பட்டா பரிந்துரை செய்வதற்கு நான் கேட்ட பணம் கொடுத்தால்தான் பரிந்துரை செய்வேன் என்றும், இல்லை என்றால் எத்தனை நாள் ஆனாலும் பட்டா வாங்க முடியாது என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார்.

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. In Ranipettai V&AC, Cr.No.01/AC/2022/RPT, U/s 7(a) of Prevention of Corruption Act 1988 (as Amendment In 2018). Continues.....)**

பின்னர் நான் நேற்று 28.04.2022 அன்று காலை சுமார் 11 மணிக்கு பழையபாளையம் VAO அலுவலகம் சென்று VAO முருகன் அவர்களை எனது பட்டா சம்மந்தமாக பார்த்தேன். அதற்கு அவர் என்னிடம் நான் கேட்ட பணம் ரூ.5000 ஐ கொடுத்தால் தான் நான் கொடுத்த மனுவை பட்டா பெயர் மாற்றம் செய்ய சோளிங்கர் வட்டாச்சியர் அலுவலகத்திற்கு பரிந்துரை செய்து அனுப்புவேன், இல்லை என்றால் பட்டா பெயர் மாற்றம் செய்ய முடியாது என்று சொல்லி என்னை அடுத்த வாரம் வியாழக்கிழமையன்று (05.05.2022) நான் கேட்ட பணம் ரூ.5000த்துடன் என்னை வந்து எனது அலுவலகத்தில் சந்தித்து கொடுக்கும்படியும் பின்னர் மேற்படி மனுவை பட்டா பெயர் மாற்றம் செய்ய சோளிங்கர் வட்டாச்சியர் அலுவலகத்திற்கு பரிந்துரை செய்கிறேன் என்று தெரிவித்து அனுப்பினார். ஆனால் எனக்கு பழையபாளையம் VAO முருகன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.5000 கொடுக்க விருப்பம் இல்லாததால் அவர் கேட்ட லஞ்ச பணம் ரூ.5000 எடுத்து வந்து அவர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு புகார் மனு இன்று 04.05.2022 ம் தேதி கொடுத்தேன். எனக்கு நிலத்தில் நடவு வேலை இருந்ததால் என்னால் உடனே புகார் கொடுக்க வர முடியவில்லை. தாங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்புக்கொடுக்கிறேன். இப்படிக்கு (ஒப்பம் P.ஆனந்தகுமார்) 04,05.2022.

Sir, Received the complaint on 04.05.2022 at 16.00 hrs after verifying the antecendents of the accused and credibility of the complainant, I have registered a case in Ranipettai V&AC Cr.No.01/AC/2022/RPT, u/s 7(a) of The Prevention of Corruption Act 1988 as Amended by Prevention of Corruption (Amendment) Act 2018 on 04.05.22 at 17.00 hrs. Sd/- xxxxxxxxxxx (S.VIJAYALAKSHMI) 04/05/2022, Ins. of Police, V&AC, Ranipettai. The original FIR along with complaint sent to the Hon'ble CJM and Special Judge, Vellore. Copies send to Officers concerned and took-up the investigation.

S. Vijayalakshmi 4/5/22

(S.VIJAYALAKSHMI)
Ins. of Police
V&AC, Ranipettai